## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## பதினோராம் பத்து

### ஆறாம் திருமொழி - மைந்நின்ற
### ப்ரளய ஆபத்தில் பாதுகாத்த எம்பெருமானையே
### ஆஶ்ரயிக்கும்படி உலகத்தார்க்கு உபதேசித்தல்

** மைந்நின்ற கருங்கடல் வாய் உலகின்றி *
வானவரும் யாமும் எல்லாம் *
நெய்ந்நின்ற சக்கரத்தன் திருவயிற்றில் *
நெடுங்காலம் கிடந்தது ஓரீர் **
எந்நன்றி செய்தாரா * ஏதிலோர்
தெய்வத்தை ஏத்துகின்றீர்? *
செய்ந்நன்றி குன்றேன்மின் * தொண்டர்காள்!
அண்டனையே ஏத்தீர்களே 1

நில்லாத பெருவெள்ளம் * நெடுவிசும்பின்
மீதோடி நிமிர்ந்த காலம் *
மல் ஆண்ட தடக்கையால் * பகிரண்டம்
அகப்படுத்த காலத்து ** அன்று
எல்லாரும் அறியாரோ? * எம்பெருமான்
உண்டுமிழ்ந்த எச்சில் தேவர் *
அல்லாதார் தாம் உளரே? * அவன் அருளே
உலகாவது அறியீர்களே? 2

நெற்றி மேல் கண்ணானும் * நிறை மொழி வாய்
நான்முகனும் நீண்ட நால் வாய் *
ஒற்றைக் கை வெண்பகட்டின் * ஒருவனையும்
உள்ளிட்ட அமரரோடும் **
வெற்றிப் போர்க் கடல் அரையன் * விழுங்காமல்
தான் விழுங்கி உய்யக் கொண்ட *
கொற்றப் போர் ஆழியான் * குணம் பரவாச்
சிறு தொண்டர் கொடியவாறே! 3

பனிப் பரவைத் திரை ததும்பப் * பார் எல்லாம்
நெடுங்கடலே ஆன காலம் *
இனிக் களைகண் இவர்க்கில்லை என்று * உலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி **
முனித் தலைவன் முழங்கொளி சேர் * திருவயிற்றில்
வைத்து உம்மை உய்யக் கொண்ட *
கனி களவத் திரு உருவத்து ஒருவனையே *
கழல் தொழுமா கல்லீர்களே 4

பார் ஆரும் காணாமே * பரவை மா
நெடுங்கடலே ஆன காலம் *
ஆரானும் அவனுடைய திருவயிற்றில் *
நெடுங்காலம் கிடந்தது ** உள்ளத்து
ஓராத உணர்விலீர்! உணருதிரேல் *
உலகளந்த உம்பர் கோமான் *
பேராளன் பேர் ஆன * பேர்கள்
ஆயிரங்களுமே பேசீர்களே 5

பேய் இருக்கு நெடுவெள்ளம் * பெருவிசும்பின்
மீதோடிப் பெருகு காலம் *
தாய் இருக்கும் வண்ணமே * உம்மைத் தன்
வயிற்று இருத்தி உய்யக் கொண்டான் **
போயிருக்க மற்று இங்கோர் * புதுத் தெய்வம்
கொண்டாடும் தொண்டீர்! * பெற்ற
தாய் இருக்க மணை வெந்நீர் ஆட்டுதிரோ? *
மாட்டாத தகவற்றீரே 6

மண்ணாடும் விண்ணாடும் * வானவரும்
தானவரும் மற்றும் எல்லாம் *
உண்ணாத பெருவெள்ளம் * உண்ணாமல்
தான் விழுங்கி உய்யக் கொண்ட **
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் *
கழல் சூடி அவனை உள்ளத்து *
எண்ணாத மானிடத்தை * எண்ணாத
போது எல்லாம் இனியவாறே 7

மறம் கிளர்ந்த கருங்கடல் நீர் * உரம் துரந்து
பரந்தேறி அண்டத்து அப்பால் *
புறம் கிளர்ந்த காலத்துப் * பொன் உலகம்
ஏழினையும் ஊழில் வாங்கி **
அறம் கிளர்ந்த திருவயிற்றின் * அகம்படியில்
வைத்து உம்மை உய்யக் கொண்ட *
நிறம் கிளர்ந்த கருஞ்சோதி * நெடுந்தகையை
நினையாதார் நீசர் தாமே 8

அண்டத்தின் முகடழுந்த * அலை முந்நீர்த்
திரை ததும்ப ஆவா! என்று *
தொண்டர்க்கும் அமரர்க்கும் * முனிவர்க்கும்
தான் அருளி ** உலகம் ஏழும்
உண்டொத்த திருவயிற்றின் * அகம்படியில்
வைத்து உம்மை உய்யக் கொண்ட *
கொண்டற்கை மணிவண்ணன் * தண்குடந்தை
நகர் பாடி ஆடீர்களே 9

** தேவரையும் அசுரரையும் * திசைகளையும்
கடல்களையும் மற்றும் முற்றும் *
யாவரையும் ஒழியாமே * எம்பெருமான்
உண்டுமிழ்ந்தது அறிந்து சொன்ன **
கா வளரும் பொழில் மங்கைக் * கலிகன்றி
ஒலி மாலை கற்று வல்லார் *
பூ வளரும் திருமகளால் அருள் பெற்றுப் *
பொன் உலகில் பொலிவர் தாமே 10

**அடிவரவு:** மை நில்லாத நெற்றி பனி பாராரும் பேய் மண் மறம் அண்டத்தின் தேவரை நீள்நாகம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---